

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், அம்பராம்பாளையம் பகுதியில் சுப்ரமணியம் என்பவரின் விவசாய நிலத்தில் தென்னை பயிரில் வேர் வாடல் நோயால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் வேளாண் உற்பத்தி ஆணையர் / வேளாண்மை – உழவர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், தோட்டக்கலை மலை பயிர்கள் துறை இயக்குனர் குமரவேல் பாண்டியன், மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக துணை வேந்தர் திருமதி.கீதா லட்சுமி, தென்னை வளர்ச்சி வாரிய இயக்குநர் அறவாழி ஆகியோர் உள்ளனர்.




சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா தலைமையில், நேற்று (29.02.2024) தேனாம்பேட்டை மண்டலம், ஜி.என்.செட்டி சாலை, சர்.பிட்டி தியாகராயர் அரங்கில் மத்திய சென்னை மாவட்ட சுகாதாரப் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே. ஜெ. பிரவீன் குமார், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, தேனாம்பேட்டை மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், மாமன்ற உறுப்பினர்கள் திரு.ஏழுமலை, திரு. பாஸ்கர், திருமதி பூர்ணிமா, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ். பானுமதி, கூடுதல் மாநகர நல அலுவலர்கள், கூடுதல் மாநகர மருத்துவ அலுவலர்கள், மண்டல நல அலுவலர்கள், மண்டல மருத்துவ அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### க.கோவிந்தராஜ் தலைமை, மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி. - சி.பி.திருமலை முன்னிலை!

# அண்ணாநகர் 101 வது வட்டத்தில் அறுசுவை உணவு நலஉதவிகள்!

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் - ச.பரமசிவம் - கார்த்திக் மோகன் பங்கேற்பு!

சென்னை, மார்ச். 1

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டக் கழகம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமையில் 1000 பேருக்கு அறுசுவை உணவு (பிரியாணி) மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (1.3.2024 வெள்ளிக்கிழமை) காலை 8 மணி அளவில், வட்டக் கழகத்திற்கு உள்ள பல்வேறு இடங்களில் நடைபெறுகிறது.

101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி. பி.திருமலை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணாநகர் வடக்குப் பகுதி கழகச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் கழகக் கொடியை ஏற்றி நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் வருமாறு:

டி.பிளாக், ஆர்.வி.நகர் சந்திப்பு, கெனால் ரோடு, பாரத் பிளாஸ் ஆர்.வி.நகர், கார்டன் ரோடு, மண்டபம் ரோடு, பள்ளியோசு தெரு, குஜ்ஜி மெயின் தெரு, வ.உ.சி.நகர் விநாயகர் கோயில் அருகில், திருவள்ளுவர் நகர் பகுதியில் மதியம் 12 மணி அளவில் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் வட்டத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழகச் செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்கின்றனர்.

### வேளச்சேரி கிழக்கு பகுதி

# 179வது வட்டத்தில் 1000 பேருக்கு அறுசுவை அசைவ விருந்து!

### துரை கபிலன் முன்னிலை! ஆ. பாண்டியன் ஏற்பாட்டில்!

சென்னை, மார்ச் 1-

வேளச்சேரி கிழக்கு பகுதி 179 வது வட்ட கழக செயலாளர் ஆ. பாண்டியன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்கு பகுதி 179 வட்டத்தில் கழக தலைவர் தங்க தளபதி திராவிட மாடல் நாயகன், தமிழக முதல்வர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைக்கிணங்க, வட்ட கழக செயலாளர் ஆ. பாண்டியன் ஏற்பாட்டில் வேளச்சேரி கிழக்கு பகுதி கழக செயலாளர் துரை கபிலன் முன்னிலையில் இன்று (1.3.2024) காலை 08:00 மணியளவில் கழக கொடி ஏற்றி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 12:00 மணிக்கு 179 வது வட்டத்திற்கு உட்பட்ட இரண்டு இடங்களில் அறுசுவை அசைவ விருந்து வழங்கும் நிகழ்ச்சி 1. பெசன்ட் நகர் அன்னை வேளாங்கண்ணி சர்ச், திடீர் நகர் அருகில் 500 பேருக்கும் 2. லட்சுமிபுரம் காந்தி சிலை அருகே 500 பேருக்கும் வழங்கப்படு கிறது.

அறுசுவை அசைவ விருந்து வழங்கும் நிகழ்ச்சியில் வேளச்சேரி கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள், பொது குழு உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், மன்ற செயலாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 179 வது வட்ட கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 179வது வட்டக் கழகச் செயலாளர் ஆ.பாண்டியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# குன்றத்தூர் நகரத்தில் கழகக் கொடியேற்றி இனிப்பு!

### நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

குன்றத்தூர், மார்ச் 1 -

குன்றத்தூர் நகரக் கழகச் செயலாளர் சத்தியமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

குன்றத்தூர் நகரத்தில் இன்று (1.03.2024 - வெள்ளிக்கிழமை) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு காலை 8 மணியளவில் வார்டு கழக செயலாளர்கள் அவரவர் பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் தங்கள் வார்டில் உள்ள கொடி கம்பத்தில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இந் நிகழ்ச்சியில் குன்றத்தூர் நகரக் கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள், கழகத் தோழர்கள் என அனைவரும் பெருந்திரளாய் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நே.சிற்றரசு, மா.பா.அன்புதுரை, மல்லிகா யுவராஜ் எம்.சி. பங்கேற்பு!

# ஆயிரம்விளக்கு 118 வது வட்டத்தில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கல்!

### வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் அறிக்கை!

சென்னை, மார்ச். 1

ஆயிரம்விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்டக் கழகம் சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு கழகக் கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கும் விழா இன்று (1.3.2024 வெள்ளிக்கிழமை) காலை 9 மணி அளவில், சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு, தோமையப்பன் தெரு, புதுப்பேட்டை கிளைக் கழக மன்றத்தில் ழுங்கப்படு கிறது.

க. அன்பழகன் தலைமையில் ம.ஜெயக்குமார், ஏ.வி. ராமநாதன், ப.வினோத்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. பகுதிக் கழகச் செயலாளர் மா.பா. அன்புதுரை, மல்லிகா யுவராஜ் எம்.சி ஆகியோர் கலந்து கொண்டு கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்குகிறார்கள்.

இந்நிகழ்ச்சி அனைத்திற்கும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், அனைத்து அணிகளைச் சார்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தியாகராயர்நகர் மேற்கு பகுதி

# 130 வது வட்டத்தில் கழகக் கொடியேற்றி அறுசுவை உணவு நலஉதவிகள்!

### வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் அறிவிப்பு!

சென்னை, மார்ச். 1

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் மேற்கு பகுதி, 130 வது வட்டக் கழகத்தின் சார்பில் வட்டச் செயலாளர் டி.கமல் தலைமையில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (1.3.2024 வெள்ளிக்கிழமை) வட்டக் கழகத்திற்கு உட்பட்ட கீழ்காணும் தெருக்களில் ஒலி பெருக்கிகள் அமைத்து கழகக் கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கி, பள்ளி மாணவ மாணவியருக்கு நல உதவிகள் வழங்கியும், அறுசுவை உணவு வழங்கியும், சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் எம்.பழனி கிராமாணியார், என்.ராமகிருஷ்ணன், 130 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ். பாஸ்கர், வி.மாரி, பில்டர் கே.சரவணன், தமிழ் எம். பழனி, ஜி.ஜி.சேகர், எஸ்.ஆனந்தன், ஏ.கே.காசிம், எஸ்.சரவணன், கே.பாபுஜி, எஸ்.விஜயலட்சுமி, ஆர்.வி.ரத்தினசாமி, வி.குமார், ஜி.தண்டபாணி, ஆர். விஜயராமகிருஷ்ணன், என்.சுந்தரம், சி.சுந்தர், எம். சுரேஷ், குழந்தைவேலு, எல். கணேஷ், டி.ஜி.சீனிவாசன், டி.ரவி, பி ஸ்ரீதர் இ.ஜெயக்குமார், சி.மகேஷ், எம்.கிருஷ்ணன், சி.எஸ்.அசோகன், வி. ஹரி, ஆர்.மணி, ர.பழனி, ஜி. பழனி, அஜ்மல்கான், பி. அசோக், சி.ஹரிவேலன், முருகேஷ், கலாவதி ஜெனிதா, ஆர். திலகவதி, டி.சித்ராதேவி, என். விஜயலட்சுமி மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

எனவே வட்டத்துக்குட்பட்ட மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கழகக் கொடியேற்றும் இடங்கள் வருமாறு:

அழகிரி நகர் மெயின் ரோடு, கங்கை அம்மன் கோயில் தெரு, வடபழனி ஆண்டவர் கோயில் தெரு, மசூதி தெரு, வன்னியர் தெரு, பாலாஜி அவென்யூ, ஒற்றைவாடை தெரு, அழகிரிநகர் 2 வது தெரு, அழகிரிநகர் 3 வது தெரு, பக்தவச்சலம் காலனி 1 வது தெரு ஆகிய இடங்கள் கலர் கொடியேற்றி இனிப்பு வழங்கப்படுகிறது.

இவ்வாறு 130 வது வட்டச் செயலாளர் டி.கமல் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 148வது வட்டத்தில் இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி அவர்கள் தலைமையில் வீடுவீடாக சென்று திண்ணை பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் 148வது வட்ட கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ். மற்றும் வட்ட கழக கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் மற்றும் இளைஞர் அணி மகளிர் அணியினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### சென்னை மாநகராட்சி

# மத்திய சென்னை மாவட்ட சுகாதாரப் பேரவைக் கூட்டம்!

## மேயர் ஆர். பிரியா தலைமையில் நடைபெற்றது!

சென்னை,மார்ச்.1

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் துறையின் சார்பில் மாவட்ட சுகாதாரப் பேரவைக் கூட்டம் மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில் தெற்கு வட்டார அளவில் வேளச்சேரி, ராஜலட்சுமி திருமண மண்டபத்திலும், மத்திய வட்டார அளவில் ஜி. என்.செட்டி சாலை, சர்.பிட்டி தியாகராயர் அரங்கிலும், வடக்கு வட்டார அளவில் தண்டையார்பேட்டை, திருவொற்றியூர் பிரதான சாலையில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனை கூட்டரங்கிலும் நேற்று (29.02.2024) நடைபெற்றது.

இப்பேரவைக் கூட்டத்தில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், குடிநீரில் குளோரின் அளவினை ஆய்வு செய்தல், தீவிர கொசு ஒழிப்புப் பணி, மாநகர ஆரம்ப சுகாதார நிலையத்தின் சேவைகள், சமுதாய நல மருத்துவ நிலையத்தின் சேவைகள், மக்களைத் தேடி மருத்துவம், சிறப்பு மருத்துவ முகாம்கள், வீடற்றோருக்கான காப்பகங்கள், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்குதல், மதுபோதை நோயாளிகளுக்கான மறுவாழ்வு மையம், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டம், அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மேயர் பேசும்போது தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் சுகாதாரத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். கல்வியும், சுகாதாரமும் தனது இரு கண்கள் என்று தமிழ்நாடு முதலமைச்சர் கூறியுள்ளார்கள். நிதி நிலை அறிக்கை மற்றும் எந்த திட்டங்கள் அறிவித்தாலும், அதில் கல்விக்கும், சுகாதாரத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டை பார்த்து வியக்கும் அளவிற்கு செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கொசு ஒழிப்பு நடவடிக்கைக்காக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தனி ஆய்வகம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு கொசு மருந்தின் வீரியம் மற்றும் கொசுக்கள் ஒழிப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும். பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் இந்த ஆய்வகம் அமைக்கப்பட உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வருகிற நாட்களில் மருத்துவர்கள் பற்றாக்குறை சரி செய்யப்படும். மாநகராட்சியில் 9 டயாலிசிஸ் மையங்கள் இயங்கி வருகிறது. ஆலந்தூர் மண்டலத்தில் டயாலிசிஸ் மையம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

சுகாதாரம் என்பது பொதுமக்களுக்கு மிகவும் சேவை செய்யக் கூடிய துறை. இந்தத் துறையில் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 13 நகர்ப்புர சமுதாய நல மையங்கள், 140 சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள் இருந்தாலும், இன்னும் மருத்துவமனைகள், மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் தேவை என்று மாமன்றத்தில் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மண்டலக் குழுத் தலைவர்கள் சார்பில் பொதுமக்களின் கோரிக்கைகள் வைக்கப்படுகிறது.

இன்று நடைபெறும் இந்தப் பேரவைக் கூட்டத்தில் நடத்தப்படும் கருத்துக் கேட்பின் அடிப்படையில் பொது மக்களின் கருத்துகளை ஒருங்கிணைத்து மாநில அளவிலான கொள்கைகளாக அவற்றை அனுப்பி வைக்கப்படும்.

சுகாதாரத்துறை முந்தைய காலக்கட்டங்களில் காலரா, அம்மை போன்ற நோய்கள், சமீபத்தில் கோவிட் தொற்று போன்ற காலக்கட்டங்களில் தங்களின் உயிரையும் பொருட்படுத்தாமல், மக்களுக்கு சேவை செய்யும் ஒரு துறை. இந்தத் துறையில் கருத்துக்கேட்பு நடத்தியதற்காக அனைத்து அதிகாரிகளுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதாரத்துறை இன்னும் சிறப்பாக செயல்பட்டு பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை தொடர்ந்து வழங்கிட இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, வட்டார துணை ஆணையாளர்கள் எம். பி. அமித், (தெற்கு), கே. ஜெ. பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர்கள் என். சந்திரன் (ஆலந்தூர்), எஸ். மதன்மோகன் (தேனாம்பேட்டை), நேதாஜி யு. கணேசன் (தண்டையார்பேட்டை), மாமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழரசி சோமு, திருமதி விமலா கருணா, திருமதி செல்வி ரமேஷ், ஏழுமலை, பாஸ்கர், திருமதி பூர்ணிமா, சிவக்குமார், திருமதி ரேணுகா, திருமதி பவித்ரா, திருமதி குணசுந்தரி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தியாகராயர் நகர் கிழக்கு பகுதி

# 135 ‘அ’ வட்டம் முதல்வர் பிறந்தநாள் விழா!

### வட்டச் செயலாளர் மு.செல்வகுமார் அறிக்கை!

சென்னை.மார்ச்.1-

சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு அவர்களின் அறிவுறுத்தலின்படியும் தியாகராயர் நகர் கிழக்கு, மேற்கு பகுதி செயலாளர்கள், ஜெ.கருணாநிதி, கே.ஏழுமலை அவர்களின் வழிகாட்டுதலின்படியும் கழக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 135 அ வட்டத்தில் உள்ள பல்வேறு இடங்களில் கழகத்தின் இருவண்ண கொடியேற்றி, ஒலிபெருக்கி அமைத்து, கழக அரசின் சாதனைகளை விளக்கி இனிப்புகள், அறுசுவை உணவுகள், பள்ளிக் குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள், சர்க்கரை பொங்கல் வழங்கும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாகம் 33 ல் காலை 9:00 மணிக்கு கழக கொடியேற்றி வைத்து பொதுமக்கள் 200 பேருக்கு லட்டுகள் வழங்கப்படுகிறது.

பாகம் 34 ல் காலை 9:30 மணிக்கு ஒட்டகபாளையத்தில் உள்ள பொதுமக்களுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கி பள்ளி மாணவ மாணவியருக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

பாகம் 55 ல் காலை 10:00 மணிக்கு கழகக் கொடி ஏற்றி பொது மக்களுக்கு லட்டுகள் வழங்கப்படு கிறது.

பாகம் 56 ல் காலை 10:30 மணிக்கு கழக கொடி ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்படுகிறது.

பாகம் 58 ல் காலை 11:00 மணிக்கு, கழக கொடி ஏற்றி சர்க்கரைப் பொங்கல் வழங்கி பொதுமக்களுக்கு லட்டுகள் வழங்கப்படுகிறது.

பாகம் 76 ,77 ல் காலை 11:30 மணிக்கு பொது மக்களுக்கு கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்படு கிறது.

பாகம் 75, 81, 82 பாகத்தில் உள்ள பொது மக்களுக்கு மதியம் 12:00 மணிக்கு அறுசுவை உணவு பிராயாணி 300 பேருக்கு வழங்கப் படுகிறது.

பாகம் 80 ல் கிளைக் கழகத்தின் சார்பில் 671 பேருக்கு மதியம் 12:30 மணிக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்கப்படுகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி அவர்களும், தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை அவர்களும், தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு. மணி ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்கள். இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் வட்ட செயலாளர் மு. செல்வகுமார் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. எனவே கிளை கழகத்தைச் சார்ந்த இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர் ஆகியோர்கள் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# மாங்காடு நகரத்தில் கழகக் கொடியேற்றி இனிப்பு!

### நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

மாங்காடு, மார்ச் 1 -

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

மாங்காடு நகரக் கழகத்தில் இன்று (1.03.2024 - வெள்ளிக்கிழமை) முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு காலை 8 மணியளவில் வார்டு கழக செயலாளர்கள் அவரவர் பகுதியில் உள்ள கழக நிர்வாகி கள் கழகத் தோழர்கள் தங்கள் வார்டில் உள்ள கொடி கம்பத்தில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அதன் பின்பு காலை 9.30 மணி அளவில் மாங்காடு மெயின் ரோட்டில் அமைந்துள்ள தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோர் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து கழகக் கொடி ஏற்றி இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட உள்ளதால்

நகரக் கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள், கழகத் தோழர்கள் என அனைவரும் பெருந்திரளாய் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### க.கோவிந்தராஜ் தலைமை ! இரா. செந்தில்குமார் முன்னிலையில்

# 51வது வட்டத்தில் முதல்வர் பிறந்த நாள்!

### ஆர்.டி.சேகர்,கலாநிதி வீராசாமி,ஐட்ரீம்ஸ் மூர்த்தி பங்கேற்பு !

சென்னை மார்ச்:1

கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்ட கழக சார்பில் இன்று ( 1.03.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில் ஜெ.பி. கோயில் தெரு, சஞ்சிவிராமன் கோயில் தெரு சந்திப்பில் வட்ட செயலாளர் க. கோவிந்தராஜ் தலைமையில் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்க படுகிறது.

இதில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி, இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள்,பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்

ஜி . உ மா ப தி , பி.சத்தியநாராயணன், ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

### வி.இ.மதியழகன் முன்னிலை! கா.வீ.தியாகராஜன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் 300 பேருக்கு உணவு!

### தமிழச்சி தங்கப் பாண்டியன் எம்.பி. - எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை, மார்ச் 1-

கழக தலைவர் - தமிழக முதல்வர் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக மாவட்ட துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் ஏற்பாட்டில் பகுதி கழக செயலாளர் வி.இ.மதியழகன். எம். சி. முன்னிலையில் 194 (அ) வட்டம் ஈஞ்சம்பாக்கம் பெத்தேல்நகர் பகுதியில் கழகக் கொடியேற்றி இனிப்பு, உணவு வழங்கல் நிகழ்ச்சி இன்று (01/03/2024) வெள்ளிகிழமை காலை 11:00 மணியளவில் நடைபெறுகிறது.

இதில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கப் பாண்டியன் மற்றும் சோழிங்கநல்லூர் சட்டமன்ற எஸ்.அரவிந்தரமேஷ் ஆகியோர் கலந்துகொண்டு கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி 300 நபர்களுக்கு அசைவ உணவை வழங்குகின்றனர்.

இதில் கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர் உள்ளிட்ட அணி நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் பங்கேற்கின்றனர்.